2. கவன ஈர்ப்பு.

(அ) சீர்காழி தீயணைப்பு நிலைய ஊர்தி.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' சீர்காழியில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட தீயணைப்பு நிலையத்தின் தீயணைப்பு ஊர்தியானது அங்கிருந்து அகற்றப்பட்டிருப்பது குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

22—4—1986 முதல் இயங்கிவரும் சீர்காழி தீயணைப்பு நிலையத்தில், மதுரைப் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து கட்டுமானம் செய்யப்பட்ட புதிய நீர்த்தாங்கி வண்டி DTO 2592 ஒன்று பயன்பாட்டில் உள்ளது.

2. அண்மையில் நடந்த அரியலூர் ரயில் விபத்தின் காரணத்தினாலும் ஸ்ரீரங்கம் கோவில் கும்பாபிஷேக சிறப்பு நிகழ்ச்சிக்கு சிறப்பு ஏற்பாடு செய்யும் பொருட்டு அருகாமையிலுள்ள மாவட்டங்களிலிருந்து தீயணைப்பு மற்றும் நீர்த்தாங்கி வண்டிகள் நிலைநிறுத்தப் பணிக்கு மார்ச்சு திங்களில் அனுப்பப்பட்டன. அந்நிகழ்ச்சிகள் முடிந்த பின்னர், சம்பந்தப்பட்ட நிலையங்களுக்கு அவ்வூர்திகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன. சீர்காழி தீயணைப்பு நிலையத்திலுள்ள நீர்த்தாங்கி வண்டி DTO 2592 மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு நிலைநிறுத்த பணிக்கு அனுப்பப்பட்டு, பின்னர், அந்நிலையத்திற்கே வரப்பெற்றுவிட்டது. தற்பொழுது நீர்த்தாங்கி வண்டி DTO 2592 சீர்காழி தீயணைப்பு நிலையத்தில் இயங்கி வருகிறது.

3. இதுபோன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு நிலைநிறுத்தப் பணிக்காக அண்மையிலுள்ள தீயணைப்பு நிலைய நீர்த்தாங்கி வண்டிகள் அனுப்பப்பட்டு அந்நிகழ்ச்சிகள் முடிவுற்ற பின்னர் மீண்டும் நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்படுவதும் வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். அவ்வாறு அனுப்பப்படும் காலத்தில் தேவை ஏற்பட்டால் அத்தேவைகளை சுற்று வட்டாரத்திலுள்ள மற்ற தீயணைப்பு நிலைய ஊர்திகள் கவனிக்க போதுமான ஏற்பாடுகள் செய்யப்படும். சீர்காழி தீயணைப்பு நிலயைத்தில் உள்ள தீயணைப்பு ஊர்தியானது தற்பொழுது அங்கு திரும்பிவந்து செயல்பட்டு வருகின்றது.

1987 எப்ரல் 23]

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் கடந்த மார்ச் மாதத்தில் அரியலூர் இரயில் விபத்து காரணமாகவும், ஸ்ரீரங்கம் இராஜகோபுரம் கும்பாபிஷேகம் காரணமாகவும் சிலகாலம் அந்த ஊர்தி எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். திரும்பவும் அந்தத் தீயணைப்பு நிலையத்திற்கு அந்த ஊர்தியானது வந்துவிட்டது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்தத் தீயணைப்பு நிலையம் மிகப்பெரிய அளவில் தமிழக முதல்வர் அவர்களால் — நீண்டகாலமாக அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்த அந்தத் தீயணைப்பு நிலையம் — 22–4–1986-ல் துவக்கப்பட்டு அங்கே ஒரு சிறந்த ஊர்தியை அமைத்திருக்கிறார்கள். அங்கேயிருந்து வெளியே எடுத்துச் செல்கிற போது அந்த நிலையத்திற்கு சரியான தகவல் கொடுக்கவில்லை. ஆகவேதான் இந்தக் கேள்வியைக் கேட்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே இனிமேலாவது இவ்வாறு எடுத்துச் செல்லும்போது அங்கேயுள்ள காப்பாளர்களுக்குச் சரியான தகவல் கொடுத்து எடுத்துச் செல்கிற வகையில் அரசு வலியுறுத்துமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எங்கேனும் ஒரு பெரிய திருவிழா நடைபெற்றாலோ அல்லது 5 இலட்சம், 10 இலட்சம் என்று மக்கள் கூடுகிற நிகழ்ச்சிகள் நடைபெற்றாலோ அல்லது இரண்டு, மூன்று நாட்கள் தொடர்ந்து பொது மக்கள் கூடுகிற கூட்டங்கள் நடைபெற்றாலோ சுற்றுப்புறத்தில் இருக்கிற தீயணைப்பு நிலையங்களிலிருந்து நீர்தாங்கி வண்டிகளைக் கொண்டு வந்து சேர்க்கிற பழக்கம் உண்டு. அதையொட்டித்தான் சீர்காழியில் இருந்து அந்த நீர்த்தாங்கி வண்டி, ஸ்ரீரங்கத்தில் 10 இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடுவார்கள் என்று எதிர்பார்த்து அங்கே கொண்டு போய் நிறுத்தி வைக்கப்பட்டது. அந்தப் பணி முடிந்த பிறகு சீர்காழிக்குக் கொண்டு வந்து வைக்கப்பட்டது. நிலையத்திற்குச் சொல்லாமல் நிலையத்தில் இருக்கிற வண்டிகளை வேறு யாரும் எடுக்க முடியாது. ஆகவே நிலையத்தில் இருக்கிற வண்டிகளை வேறு யாரோ எடுத்துக்கொண்டு போவார்கள் என்று சொல்லவும் முடியாது. தீயணைப்புத் துறையினர் மூலமாகத்தான் இந்த ஏற்பாட்டைச் செய்கிறோம். தீயணைப்புத் துறையில் இருக்கிற மேலதிகாரிகள் ஆணையிட்டுத்தான் எடுத்துச் செல்ல முடியும். தனக்குத்தெரியாமல் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொன்னால் கம்ப்ளயின்ட்தான் கொடுக்கவேண்டிவரும். அப்படிப்பட்ட சூழ்நிலை எங்கேயும் ஏற்பட முடியாது. தீயணைப்புத் துறையைச் சேர்ந்த மேலதிகாரிகள் இன்னின்ன நிலையங்களிலிருந்து இன்னின்ன வண்டிகள் போய்ச்சேரலாம் என்று ஆணையிடுவார்கள். அந்த ஆணையின்படிதான் அது போய்ச்சேரும். அதற்குப் பிறகு, அந்தப் பணி முடிந்த பிறகு உரிய இடங்களுக்கு அந்த வண்டிகள் திருப்பி அனுப்பப்படும்.